வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   11.12.2024 புதன்கிழமை   இதழ் : 345   பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி வடக்கு - கிழக்கில் போராட்டங்கள்

### சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் முன்னெடுப்பு

*யாழ்ப்பாணம், டிசெ. 11*

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று, வடக்கு கிழக்கில் பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சர்வதேச மனித உரிமைகள் தினம் ஒவ்வோர் ஆண்டும் டிசெம்பர் 10 ஆம் திகதி நினைவு கூரப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்று வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் பெரும் கவனயீர்ப்பு போராட்டம் 11


படம் : கோகுலன்

## உதயங்க வீரதுங்கவுக்கு அமெரிக்கா பயணத்தடை!

*கொழும்பு, டிசெ. 11*

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவும் சிறிலங்கன் எயார்லைன்ஸின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவுக்கும் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது .

குறிப்பிடத்தக்க ஊழலில் ஈடுபட்டனர் என தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களம், இவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு பயணத்தடை விதித்துள்ளது.

ஊழலுக்கு எதிரா்ன சர்வதேச தினம் 11

## சபாநாயகர் கலாநிதி அல்லர் ஜப்பானியப் பல்கலை உறுதி

### உடன் பதவி விலகவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 11

**சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் போலியானது என ஜப்பான் பல்கலைக்கழகம் உறுதி செய்துள்ள நிலையில் அவர் பதவி விலகவேண்டும் எனவும் பாராளுமன்றத்தை சுத்தம் செய்ய வந்தவர்களால் இன்று பாராளுமன்றத்துக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் சர்ச்சைக்குரிய அறிக்கைகள் குறித்து தேசிய மக்கள் சக்தியின் 11

## மீண்டும் கூட்டமைப்பு!

### ஆராய்கிறதாம் ரெலோ

*வவுனியா, டிசெ. 11*

முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படலாமா என்பது தொடர்பில் பேசிக்கொண்டிருப்பதாக ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் 11

## மீனவர் உரிமையை வென்றெடுப்போம்!

### முல்லைத்தீவில் மாபெரும் நடைபவனி



*முல்லைத்தீவு, டிசெ. 11*

“மீனவ சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலம் கண்ணியமான வாழ்வுக்கு எம்மை அர்ப்பணிப்போம், உணவு இறையாண்மையை உறுதி செய்வோம்” என்னும் தொனிப்பொருளில் முல்லைத்தீவில் நேற்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனி ஒன்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு முன்பாக ஆரம்பித்த இந்த 11

## வவுனியாவில் தேர்தல் செலவீனத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மோசடி நடந்ததா?

### அதிகாரிகளிடம் விசாரணை ஆரம்பம்

*வவுனியா, டிசெ. 11*

தேர்தல் நடவடிக்கைகாக வவுனியாவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றின் செலவீனத்துக்காக வவுனியா மாவட்ட செயலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்ட 11

## படுகொலை செய்யப்பட்ட ஊடகர்கள் சிலரின் ஆவணங்களை காணவில்லை!

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

*கொழும்பு, டிசெ.*

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் சிலரின் ஆவணங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக, அமைச்சரவைப்பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

அதன்போது ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்தார். 11

*அத்துமீறும் மீனவர் விவகாரம்:*

## இந்திய பிரதமருடன் பேசி முற்றுப்புள்ளி வையுங்கள்!

### சம்மேளன தலைவர் மரியதாஸ் கோரிக்கை



*யாழ்ப்பாணம், டிசெ. 11*

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர்கள் தொடர்பில் இந்தியா செல்லும் எமது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியப் பிரதமருடன் பேசி முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் 11

## வைத்தியசாலைக்குள் குழப்பம் விளைவித்தால் அர்ச்சுனா பொலிஸில் ஒப்படைக்கப்படுவார்!

### மருத்துவர் சத்தியமூர்த்தி எச்சரிக்கை

*யாழ்ப்பாணம், டிசெ. 11*

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு குழப்பம் விளைவிக்க வருவாரெனின், வாசலிலேயே வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்று போதானா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் 11

## இந்தியாவுக்கு ஞாயிறன்று புறப்படுகிறார் ஜனாதிபதி

*கொழும்பு,டிசெ. 11*

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தியோகபூர்வ பயணமாக எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தத் தகவலை நேற்று 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம்





வவுனியா








யாழ்ப்பாணம்







முல்லைத்தீவு


கிளிநொச்சி



மன்னார்





திருகோணமலை





மட்டக்களப்பு







அம்பாறை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.12.2024 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அமெரிக்கத் தடையை தொடர்ந்து

சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மேற்காசிய விவகாரங்கக் கான உதவி இராஜாங் செயலர் டொனால்ட் லூ கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது, ஜனாதிபதி உள்ளடங் கலாக பலரை சந்தித்திருந்தார். அமெரிக்காவில் மீண்டும் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக வந்திருக்கும் நிலையில் இந்த விஜயம் இடம்பெற்றிருந்தது. இந்த சந்திப்புக்களின் போது இலங் கையின் ஊழல் விடயங்களை கண்டறிவதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இலங்கையின் இரண்டு அதிகாரிகள் விமானக் கொள்வனவின் போது லஞ்சம் வாங்கியதான குற்றச் சாட்டின் பெயரில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இருவரும் ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவர்கள். அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் ஊழல் குற்றச்சாட்டுக்களை வெளிப்படையான விசாரணைக்கு உட்படுத்தப் போவதாக கூறிவருகின்ற நிலையில், அமெரிக்காவின் அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. இந்த இரண்டு அதிகாரிகளுக்கும் எதிரான சட்ட நடவடிக்கையை அநுர அரசாங்கம் மேற்கொள்ள முடியும் - அவர்களது சொத்துக்களை முடக்க முடியும் - அதனை அநுர அரசாங்கம் செய்யுமா?

நல்லாட்சி அரசாங்கம் என்னும் பெயரில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காலத்தில், அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அப்போதும் இப்போது போல்தான் ராஜபக்ஷக்களின் குற்றங் களை விசாரிக்கப் போவதாக ரணில் - மைத்திரி அரசாங்கம் கூறிக்கொண்டிருந்தது. ஜோன் ஹெரி இலங்கையில் உரை யாற்றும் போது, கடுமையான நடவடிக்கைகளுக்கு அஞ்ச வேண்டாம் - அமெரிக்கா உங்களுக்கு ஆதரவாக இருக்கு மென்று குறிப்பிட்டிருந்தார் ஆனால், நடந்ததோ வேறு - ராஜபக்ஷக்கள் தொடர்பில் ஓர் ஆவணத்தைக் கூட ரணில் - மைத்திரி அரசாங்கம் வெளியிடவில்லை. இறுதியில் மைத்திரி பால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவையே பிரதமராக்கினார்.

இந்த அனுபவங்களிலிருந்து நோக்கினால் அநுர அரசாங் கம் ஊழல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமா என்பதும் கேள்விதான் ஏனெனில், ஊழல் என்னும் பெயரில் சிறிய மீன்களுக்கு தூண்டில் போடுவதில் பயனில்லை. கடந்த காலத்திலும் அப்படித்தான் நடந்திருக்கின்றது. பெரிய மீன்களை இலக்கு வைக்கும் விசேட நடவடிக்கை ஒன்றை அநுர அர சாங்கம் முன்னெடுத்தால்தான், அவர்கள் ஏனைய ஆட்சியா ளர்களிலிருந்து வேறுபட முடியும் - இல்லாவிட்டால் அநுரவும் பத்தோடு பதினொன்றுதான்.

இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாக கட்டமைப்புக்களில் ஊழல் விரவிக் கிடக்கின்றது என்பதே பொதுவான குற்றச்சாட்டு. இதனை மாற்றியமைக்கும் ஓர் ஆட்சியை வழங்கப் போவ தாகவே அநுர தரப்பு கூறிவந்தது. ஆனால், இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்களில் அவ்வாறான மாற்றங்களை இலகுவாக ஏற்படுத்த முடியுமா என்பதுதான் கேள்வி.

## வன்னி மாவட்டத்தில் இதுவரை 338 பேர் தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிப்பு

வவுனியா, டிசெ. 11

வன்னி தேர்தல் மாவட டத்தில் இதுவரை 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக் கையை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சில தரப்புகள் பதிவுத்தபாலில் அவற்றை அனுப்பியுள்ளதால் கிடைக் கப்பெறுவதில் தாமதம் ஏற் பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், தங்களது தேர்தல் செலவு அறிக் கையை கடந்த 6ஆம் திகதி நள்ளிரவுக்கு இடையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அந்தவகையில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் இது வரை 14 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக் களைச் சேர்ந்தவர்கள் உட் பட 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப் பித்துள்ளதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக் கின்றன.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 25 சுயேச்சைக் குழுக்கள் என மொத்தமாக 48 தரப்புகளைச் சேர்ந்த 432 பேரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந் தன.

அவற்றில் 5 சுயேச்சைக் குழுக்களினதும் 9 அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 14 பேரில் செலவுஅறிக்கை இது வரை கிடைக்கப்பெற வில்லை என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, சில தரப்பு கள் பதிவுத்தபாலில் செலவு அறிக்கையை அனுப்பி வைத் துள்ள நிலையில் அவை கிடைக்கப்பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## முரணாக அமைந்துள்ள கட்டடம் நகரசபை எச்சரிக்கை அறிவித்தல்

வவுனியா, செ. 11

வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக வுள்ள பீசா விற்பனை நிலை யம் அமைந்துள்ள கட்டடம், அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக அமைக்கப்பட்டுள் ளதாக தெரிவித்து கட்டடத் தின் உரிமையாளருக்கு எதி ராக வவுனியா நகர சபை யால் எச்சரிக்கை அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில், நகர சபை கட்டளைச் சட்டங்களின் பிரகாரமும் நகரப் பகுதிக்குள் முன்னெ டுக்கப்படும் கட்டடங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் வவுனியா நகர சபையிடம் முறையான அனுமதி பெற்றி ருக்கப்பட வேண்டும்.

எனினும், குறித்த ஆத னத்தில் நகர சபையால் கடந்த 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு முரணாக இவ் அமைக் கப்பட்டு வணிக ரீதியிலான நோக்கத்தில் இக் கட்டடம் இயங்குவதனால் அது தொடர்பில் குறிப்பிட்ட சில ஆவணங்களை நகர சபைக்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட் டிருந்தது.

அந்தவகையில் திருத்திய வரைபடத்துக்கான கட்டட அனுமதி, அனுமதிக்கப் பட்ட வரைபடத்துக்கான குடிபுகு சான்றிதழ், சுற்றுச் சூழல் உரிமம், வியாபார உரிமம் ஆகியவற்றை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கு மாறு நகர சபையால் கோரப் பட்டிருந்தது. எனினும், ஆவணங்கள் சமர்ப்பிக்கப் படாத நிலையில் மீளவும் 7 நாட்களுக்குள் அந்த ஆவ ணங்களை சமர்ப்பிக்குமாறு நகர சபையின் செயலாள ரால் அறிவித்தல் ஒட்டப் பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயல்படத்தவ றின் நகர அபிவிருத்தி அதி கார சபையின் திருத்தச் சட் டங்களின் பிரிவுகளை மீறி நகர சபையின் அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக கட் டடம் அமைத்து செயல் படுவதாக கருதி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## கைவிடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் பருத்தித்துறை கிராமக்கோட்டில் மீட்பு!


யாழ்ப்பாணம், டிசெ. 11

வடமராட்சி - பருத்தித் துறை கிராமக்கோடு பகுதி யில் கைவிடப்பட்டு காணப் பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் மீட்க ப்பட்டது.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சத்தம் ஒன்று கேட்டதாகவும், திரு டன் என்ற அச்சத்தில் வெளி யில் வராது வீடுகளுக்குள் ளேயே இருந்த அயலில் உள்ள மக்கள், விடிந்ததும் வெளியே வந்து பார்த்த போது மோட்டார் சைக்கிள் ஒன்று காணப்பட்டுள்ளது.

மாதா சொருபத்தோடு மோதிய நிலையில் மோட் டார் சைக்கிள் காணப்பட் டதை அவதானித்த மக்கள் பருத்தித்துறை பொலிஸா ருக்கு தகவல் வழங்கியுள்ள னர். உடனடியாக குறித்த இடத்துக்கு வருகை தந்த பருத்தித்துறை பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டதுடன், விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 11 புதன்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 26
நல்ல நேரம் :9.00-10.30
ராகு காலம் :12.00-1.30
திதி : ஏகாதசி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். லாபம் ஈட்டுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள்.

**மிதுனம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**கடகம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். வாகனத்தை சீர செய்வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். புது பங்குதாரரை சேர்ப்பீர்கள்.

**மகரம்**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். எதிர் பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உறவி னர்கள் வீடு தேடி வருவார்கள். பாக்கிகள் வசூலாகும்.


**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். லேசாக தலை வலிக்கும். கடன் பிரச்னைகள் தீரும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இளைஞர்களுக்கு இடையே கட்டுரை போட்டி

## வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற பரிசளிப்பு விழா







வவுனியா, டிசெ. 11

சர்வதேச இலஞ்ச ஊழல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ரான்ஸ்பரன்ஸி இன்ரநெசனல் நிறுவனத்தால் இளைஞர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கட்டுரை போட்டிக்கான பரிசளிப்பு விழா வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

ஊழலுக்கு எதிரான நாளைய தேசத்தை உருவாக்குவதில் நாம் ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இக்கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் கௌரீஸ்வரன், வவுனியா முகாமையாளர் செல்வலக்சுமி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தினேஷ்குமார் மற்றும் எழுத்தாளர் சகாயநாதன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ந. கபிலநாத் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 165 இளைஞர்கள் பங்குபற்றியிருந்தனர். (எ-10)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாககூறி ரூ. ஒரு கோடியே 10 இலட்சம் மோசடி

## வவுனியாவில் இளைஞன் ஒருவர் கைது

வவுனியா, டிசெ. 11

கனடாவுக்கு அனுப்புவதாக கூறி ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் பணத்தை 16 பேரிடம் பெற்று மோசடி செய்ததாக இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், மாங்குளம், கிளிநொச்சி உள்ளிட்ட பல் வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களிடம் இளைஞன் ஒருவர் கனடாவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு வேலைக்கு அனுப்புவதாகவும், முதல் கட்டமாக ஒரு தொகைப் பணத்தை தருமாறும், மிகுதிப் பணத்தை கனடா சென்று வேலை செய்து கொடுக்கலாம் எனவும் கூறி பலரிடம் பணம் பெற்றுள்ளார்.

குறிப்பாக ஒவ்வொருவரிடமும் 5 இலட்சம் தொடக்கம் 10 இலட்சம் ரூபாய் வரை பணம் பெறப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட 16 பேர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் 16 பேரிடமும் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் மோசடி செய்துள்ளார். மேலதிக விசாரணையின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.(எ)

# ஆண்டான்குளம், தண்ணிமுறிப்பில் தமிழர் மீள்குடியேற்றப்பட வேண்டும்

## குருந்தூர்மலையில் ரவிகரன் எம். பி. தெரிவிப்பு

குருந்தூர்மலை, டிசெ. 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக கிராமங்களான தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டுமெனவும், அதற்காக உரிய தரப்பினருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுமெனவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் ரவிகரன் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது, தண்ணிமுறிப்பு கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் சிலருடன் கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குருந்தூர்மலையில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து, தொல்லியல் திணைக்களத்தின் இடையூறால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குருந்தூர்க்குளத்தின் அபிவிருத்தி வேலைகள் தொடர்பிலும் ரவிகரன் எம். பி. அவதானம் செலுத்தினார்.

1984ஆம் ஆண்டு ஆண்டான்குளம் மற்றும், தண்ணிமுறிப்பில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் இராணுவக்கெடுபிடிகள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் ஆண்டான்குளம் மற்றும், தண்ணிமுறிப்பு பகுதிகளைச் சேர்ந்த மக்களை 40 வருடங்களாகியும் இதுவரை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணைக்கு எதிராக செயற்படுகிறது அரசாங்கம்

## நளின் பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 11

**அரிசியின் விலையை அதிகரித்து மக்கள் ஆணைக்கு எதிராக அரசாங்கம் செயற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசியின் விலை 220 ரூபாவாக காணப்பட்டது. ஜனாதிபதி அரிசி ஆலை உரிமையாளர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி அரசியின் விலையை 230 ரூபாவாக அதிகரித்துள்ளார்.

அவர் ஆலை உரிமையாளர்களிடம் மண்டியிட்டு இந்த விலையை அதிகரித்துள்ளார். இதன்மூலம் அவர்களுக்கு மேலதிக வருமானம் கிடைக்கப்பெறுவதற்கான வழிவகைகளை செய்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்தியின் மூலம் தன்னிறைவடைவதாகக் கூறிய அரசாங்கம் இன்று அரிசியை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. தேர்தல் காலங்களில் கூறிய விடயங்கள் தற்போது காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

நாட்டுக்குப் பொருத்தமான திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் கிடையாது-என்றார்.

# வாகன இறக்குமதிக்கு அனுமதி என கூறி பல நிறுவனங்கள் பெரும் பண மோசடி!

கொழும்பு, டிசெ. 11

வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் உறுதியான தீர்மானத்தை மேற்கொள்ளாத நிலையில், வாகன இறக்குமதிக்கு அனுமதியளிப்பதாகக் கூறி பல நிறுவனங்கள் நிதி மோசடியில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே பேராசிரியர் அமிந்த மெட்சில பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் இது குறித்து இலங்கை மத்திய வங்கி கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவதாக தற்போதைய அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும், வாகன இறக்குமதி தொடர்பில் தற்போதைய அரசாங்கம் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை.

எதிர்காலத்தில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் உருவாக்கி புதிய வாகனங்களுக்காக சில நிறுவனங்கள் இலட்சக்கணக்கான ரூபாவை முன்பணமாகப் பெற்றுக்கொண்டு மோசடியில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# வங்கி கணக்கை ஊடுருவி 40 இலட்சம் ரூபாய் மோசடி

## ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, டிசெ. 11

நுகேகொடை பகுதியைச் சேர்ந்த ஒருவரின் வங்கிக் கணக்குக்குள் ஊடுருவி அதிலிருந்து 40 இலட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

கொலன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவுக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகவும்.

சந்தேக அந்நபர் தனக்கு நெருக்கமான மற்றுமொரு குழுவினருடன் இணைந்து இந்த மோசடியைப் புரிந்துள்ளதாகவும், மோசடியாகப் பெறப்பட்ட பணம் சந்தேக நபரின் ஐந்து வங்கிக் கணக்குகளில் வைப்பில் இடப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# அரிசிக்கான நிர்ணய விலைகளுடன் வெளியானது அதிவிசேட வர்த்தமானி!

கொழும்பு, டிசெ. 11

உள்நாட்டு அரிசிக்கான அதிகபட்ச விலைகளை நிர்ணயம் செய்து, நுகர்வோர் அதிகாரசபையால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, உள்நாட்டு நாடு அரிசி கிலோவொன்றுக்காக நிலவிய 220 ரூபாய் என்ற அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் நாடு அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் சம்பா அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 240 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் கீரி சம்பா அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் பச்சை அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

இதனிடையே, உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 215 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 225 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மற்றும் சிவப்பு சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 235 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கீரி சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 255 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# நாணய நிதிய விவகாரத்தில் அடிபணிந்துள்ள ஜனாதிபதி!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 11

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயற்திட்ட விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அடிபணிந்துள்ளார்.ஆட்சிக்கு வந்தவுடன் நாணய நிதிய செயற்திட்டத்தில் இருந்து விலகுவதாக வழங்கிய வாக்குறுதி தொடர்பில் மக்கள் கேள்வியெழுப்பவேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-ஜனாதிபதி அநுரகுமார தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளுக்கும், நடைமுறை நிர்வாகத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. கடந்த கால அரசாங்கங்களின் நிர்வாகத்தை விமர்சித்தே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி அநுரகுமார நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்.

ஆனால் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் நாணய நிதியத்தின் செயற்திட் டத்தில் இருந்து விலகினால் பொருளாதார நெருக்கடி தீவிர மடையும் என்று குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் அவர் நாட்டு மக்களை தவறாக வழி நடத்தியுள்ளார்.

நாணய நிதியத்துடனான நீட்டிக்கப்பட்ட செயற்திட்ட விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை காட்டிலும் ஜனா திபதி அநுர குமார அடிபணிந்துள்ளார்.

நாணய நிதியம் முன்வைக்கும் சகல நிபந்தனைகளுக்கும் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் நிபந்தனைகளை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொள்கிறது.

நாணய நிதிய செயற்திட்டம் தொடர்பில் தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகள் குறித்து நாட்டு மக்கள் கேள்வியெழுப்ப வேண்டும்.

பொருளா தார மீட்சிக்கான கொள்கைகளை முன்வைக்காமல் வெறும் வாக்குறுதிகளை மாத்திரம் முன்வைத்து ஆட்சிக்கு வந்தது.ஆகவே வழங்கிய வாக்குறு திகளை மக்கள் நினைவுப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# டிசெம்பர் மாதத்தின் முதல் 8 நாட்களில் 858 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

கொழும்பு, டிசெ. 11

இந்த ஆண்டின் டிசெம்பர் மாதத்தின் முதல் 8 நாட்களில், 858 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதிக்குள், 46 ஆயிரத்து 385 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 19 ஆயிரத்து 927 பேர், மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

கொழும்பில், 11 ஆயிரத்து 685 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப் பிட்டுள்ளது. (அ)

# சுற்றுச்சூழல் அமைச்சரை சந்தித்த அமெரிக்க தூதுவர்

கொழும்பு, டிசெ. 11

அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தம்மிக்க பட்டபெந்திக்கும் இடையில் நேற்று முன் தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது அமெரிக்க நிதியுதவியில் முன்னெடுக்கப்படுகின்ற காலநிலை மாற்றம், விவசாய நிலைத்தன்மை, பொன்ற விடயங்களில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் மின்சக்தித் துறை அமைச்சர் குமார ஜெயக்கொடிக்கும் இடையிலும் நேற்று முன் தினம் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இலங்கையின் எதிர்கால மின்சக்தி நிலைத்தன்மை மற்றும் மின்சக்தித்துறைப் பாதுகாப்பு தொடர்பில் இந்த சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வேளாண் துறை, கடற்றொழில், சுற்றுலாத்துறை மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற வற்றிக்கு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் எப்போதும் ஆதரவு வழங்கும் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகரின் கல்வித்தகைமை மீண்டும் வெடித்துள்ளது சர்ச்சை!

## பாராளுமன்ற இணையத்தில் "கலாநிதி' நீக்கம்

கொழும்பு, டிசெ. 11

**இலங்கை பாராளுமன்றத்தின் இணையத்தளத்தில் சபாநாயகர் அசோக சப்புமல் ரன்வல கலாநிதி பட்டம் பெற்றவர் என்ற குறிப்பு அகற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து சபாநாயகரின் கல்வித்தகமை குறித்து மீண்டும் கேள்விகள் எழுந்துள்ளன.**

முன்னர் கலாநிதி அசோக சப்புமல் ரன்வல என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்போது கலாநிதி என்பது அகற்றப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர் தான் கலாநிதிப் பட்டம் பெற்றவர் என குறிப்பிட்டது எவ்வளவு தூரம் உண்மையானது என்ற கேள்வி எழுந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்திலேயே இணையத்தளத்தில் இந்த மாற்றங்களை செய்துள்ளனர். கூகுள் தேடு பொறி கலாநிதி என்று காண்பிக்கின்றது என தவறான தகவல்கள் குறித்த ஆய்வாளர் சஞ்சனா ஹட்டொட்டுவ தெரிவித்துள்ளார். (அ)



# 7 905 வேட்பாளர்கள் இதுவரை சொத்து விவரங்கள் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 11

கடந்த நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 7 ஆயிரத்து 905 பேர், தங்களது சொத்து விவரத் திரட்டுக்களை ஒப்படைத்துள்ளதாக, தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட 7 ஆயிரத்து 412 பேரும், சுயேட்சைக் குழுக்களின் சார்பில் போட்டியிட்ட 493 பேரும், தேர்தல் ஆணைக்குழுவிடம், தங்களது சொத்து விவரங்களை ஒப்படைத்துள்ளனர். (அ)

# வைத்தியர் ஓய்வு வயதை 63ஆக நீடிக்க நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 11

வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நீடிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் அலோக பண்டார குறிப்பிட்டார்.

இது தொடர்பான நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதன்படி, தற்போது 62 வய தாகும் வைத்தியர் ஒருவரின் ஓய்வு வயது மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்படும். (அ)

# வாகன இறக்குமதி குறித்து போலி விளம்பரம், தகவல்!

## அரசாங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 11

இலங்கைக்கு எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் விரைவில் கிடைக்கும் என விளம்பரங்களை வெளியிடும் முகவர் நிலையங்களுக்கு அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி, அனைத்து வகையான வாகனங்களையும் இறக்குமதி வழங்குவது தொடர்பில் இதுவரையில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், கடந்த அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்புக்கு முன்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எமது பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ கலந்து கொண்டு வாகன இறக்குமதி தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானத்தை அறிவித்தார்.

அதன் பிரகாரம் சில கட்டுப்பாடுகளுடன் வாகன இறக்குமதியை அனுமதிக்க அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

எனவே, எந்தவொரு வாகனத்தையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிப்பதாக விளம்பரங்களை வெளியிட்டு மக்களை குழப்பவேண்டாம்.

எதிர்காலத்தில் நாட்டின் கையிருப்பினை கருத்திற் கொண்டு வாகன இறக்குமதி குறித்து தீர்மானம் எடுக்கப்படும். பொருளாதாரத்தில் தாக்கத்தை செலுத்தும் எந்த முடிவினையும் நாங்கள் எடுப்பதற்கு தயார் இல்லை-என்றார். (அ)

# பரீட்சை கடமையில் ஈடுபடுவோருக்கு கொடுப்பனவை முறையாக வழங்குக!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 11

பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய கொடுப்பனவுகளை முறையாக வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பரீட்சை ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினால் போக்குவரத்து கொடுப்பனவுகள் தொடர்பில் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக குறித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த நாட்களில் உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்பட்ட இரண்டு கடிதங்களால் பரீட்சை ஊழியர்களுக்கு புதிதாக சிக்கல் எழுந்துள்ளது. நவம்பர் மாதம் முதலாம் திகதி முதலாவது கடிதம் வழங்கப்பட்டது. அந்த கடிதத்தின்படி, பரீட்சை மண்டபத்தில் இருந்து பயணிக்கும் தூரம் 10 கிலோமீற்றருக்கு அதிகமாக இருந்தால் 1000 ரூபா செலுத்த முடிவு செய்யப்பட்டது.

டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி பரீட்சை ஆணையாளரால் மற்றொரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி 1000 ரூபாவாக இருந்த போக்குவரத்து கொடுப்பனவு 500 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 5 முதல் 10 கிலோமீற்றர் இடைப்பட்ட தூரத்திற்காக 750 ரூபா முன்னதாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது தற்போது 400 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 2 முதல் 5 கிலோமீற்றருக்கு 500 ரூபாவாக இருந்த நிலையில், தற்போது அது 300 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 2 கிலோமீற்றருக்கு குறைவாக இருந்தால் 300 ரூபா வழங்குவதாகவும், அது தற்போது 200 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பரீட்சை கண்காணிப்பாளருக்கும் கொடுப்பனவு வழங்க வேண்டுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது புதிய கடிதமொன்று வெளியிடப்பட்டு இவ்வாறு கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் அனைவரும் குழப்பத்தில் இருக்கின்றனர்-என்றார். (அ)

# டிஜிற்றல் சாரதி அனுமதி பத்திரத்துக்கு அனுமதி!

கொழும்பு, டிசெ. 11

தற்போதுள்ள வாகன சாரதி அனுமதி பத்திரத்திற்கு பதிலாக புதிய டிஜிற்றல் சாரதி அனுமதி பத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ இதனைக் கூறினார். தற்போது பாவனையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரத்தை ஸ்மார்ட் கார்டாக அறிமுகப்படுத்தி ஏறக்குறைய 15 வருடங்கள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மேலும், பல தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையில் தரவு பரிமாற்றத்தை எளிதாக்கும் வகையில், புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப, தற்போது உலகின் பல நாடுகளில் பயன்படுத்தப்படும் டிஜிற்றல் சாரதி அனுமதி பத்திரத்தை வழங்குவதற்கான பொருத்தத்தை அரசாங்கம் கண்டறிந்துள்ளதாகவும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார். (அ)

# மது போதையில் அநாகரீகமாக செயற்பட்ட கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, டிசெ. 11

இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய ஜனாதிபதி கல்லூரியில் உயர்தர பரீட்சை கடமைகளில் ஈடுபட்டிருந்தபோது மது போதையில் அநாகரீகமாக செயற்பட்டு பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை தாக்கியதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டதாக எம்பிலிபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிபிட்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வாடகைக்கு பெற்ற சொகுசு வாகனங்களை விற்பனை செய்த போலி வைத்தியர் கைது!

கொழும்பு, டிசெ. 11

வாடகைக்கு பெற்ற சொகுசு வாகனங்களுக்கு போலி ஆவணங்களை தயாரித்து அதிக விலைக்கு விற்பனை செய்த போலி வைத்தியர் ஒருவர் நுகேகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர், பாமன்கடை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து பி.எம்.டபிள்யூ மற்றும் கே.டி.எச். ஆகிய இரண்டு சொகுசு வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் கொட்டாவை பிரதேசத்தில் உள்ள கார் வாடகை நிறுவனம் ஒன்றிலிருந்து வாடகைக்கு பெற்ற கே.டி.எச். ரக சொகுசு வாகனம் ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து அதனை மீரிகம பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், முல்லேரியா பிரதேசத்தில் உள்ள கார் வாடகை நிறுவனமொன்றில் இருந்து வாடகைக்கு பெற்ற பி.எம். டபிள்யூ ரக சொகுசு வாகனம் ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து அதனை பிலியந்தலை பிரதேசத்தில் உள்ள கணக்காளர் ஒருவருக்கு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி தட்டுப்பாட்டின் பின்னணியில் சூழ்ச்சி!

## அமைச்சர் வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 11

**தேர்தலில் படுதோல்வியடைந்த தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க சூழ்ச்சி செய்கின்றனரென வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**

அரிசி தட்டுப்பாட்டின் பின்னணியில் பாரிய அரசியல் சூழ்ச்சி உள்ளது. அனைத்து சூழ்ச்சிகளையும் சட்டத்தின் ஊடாக தோற்கடிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரிசி உற்பத்தியாளர்களை நெருக்கடிக்குள்ளாக்குவதோ அல்லது அவர்களின் தொழிற்றுறையை கேள்விக்குள்ளாக்குவதோ எமது நோக்கமல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லைக் கொள்வனவு செய்து அவற்றை அரிசியாக்குவதற்கான புதிய திட்டங்களை அரச கட்டமைப்பில் முன்னெடுப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவு பொருட்களின் மாபியாக்களுக்கு ஒருபோதும் அடி பணியப் போவதில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

(அ)

# 30 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் இருவர் கைது!

கொழும்பு, டிசெ. 11

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இரண்டு பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மொரட்டுவை மற்றும் மீரிகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 33 மற்றும் 52 வயதுடைய இரு பெண்கள் ஆவார்.

சந்தேக நபர்கள் இருவரும் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 12.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்றபோது விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் சோதனைக் குட்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 20,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 100 சிகரெட் காட்டுன்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

(அ)

# புதிய மதுவரி ஆணையாளர் நியமனம்

கொழும்பு, டிசெ. 11

புதிய மதுவரி ஆணையாளராக நிர்வாக சிறப்புத் தர அதிகாரி யு.எல்.உதயகுமார பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக அவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளராக பணியாற்றியவர்.

மதுவரி ஆணையாளர் நாயகமாகப் பணியாற்றிய யு.டி.என். ஜயவீர, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கு யு.எல்.உதயகுமார பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ)

# தப்பிச் சென்ற கார் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

கொழும்பு, டிசெ. 11

கடுவலை, ஹேவாகம பிரதேசத்தில் வீதியில் பயணித்த நபரொருவரை மோதி தப்பி செல்ல முயன்ற கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடுவலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நபரொருவரை காரினால் மோதிக் கொலை செய்வதற்கு முயற்சிப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று குறித்த காரை நிறுத்துமாறு காரின் சாரதிக்கு உத்தரவிட்டுள்ளது.

இதன்போது, காரில் பயணித்த சந்தேக நபர்கள் பொலிஸ் உத்தரவையும் மீறி அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றதால் பொலிஸார் கார் மீது இரு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

ஆனாலும் சந்தேக நபர்கள் காரை நிறுத்தாமல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(அ)

# 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுள்ள வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 11

கொழும்பு , பொரளை பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் சட்டவிரோதமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 173 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கம்பஹா மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த வெளிநாட்டு மதுபானப் போத்தல் கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு மதுபானப் போத்தல்களின் மொத்த பெறுமதி 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் ஆகும்.

இது தொடர்பில் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் எங்கே? நீதி எங்கே?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மட்டக்களப்பில் நேற்று பெரும் போராட்டம்






மட்டக்களப்பு, டிசெ. 11

"இழப்பீட்டையோ, மரணச் சான்றிதழையோ நாம் கேட்கவில்லை. எமது உறவுகள் எங்கே? அவர்களுக்கான நீதி எங்கே? என்று தான் கேட்கின்றோம்"- இவ்வாறு பல கோஷங்களை எழுப்பியவாறும் வாசகங்களை தங்கியவாறும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினரால் நீதிகோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்றுக்காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத், ஞா. சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நடராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

"நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ, மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதியை", "எமது உரிமை ?, எமது எதிர்காலம் ? இப்போது, எமது உறவுகள் எங்கே?, ஓ. எம். பி. ஒரு கண்துடைப்பு நாடகம் என பல வாசகங்களை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு ஊர்வலம்

திருகோணமலை, டிசெ. 11

வெள்ளைப்பட்டி தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று திருகோணமலை - கிண்ணியாவில் நடைபெற்றது.




திருகோணமலை பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்த குறித்த விழிப்புணர்வு ஊர்வலம், கிண்ணியா பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாகச் சென்று மீண்டு பேருந்து தரிப்பு நிலையத்தை வந்தடைந்தது.

2030ஆம் ஆண்டுக்குள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை களை முடிவுக்கு கொண்டு வரு வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும், மற்றும் பொறுப்புக் கூறலை கோருவ தற்கும் உலகளாவிய முயற்சிக ளில் ஐ. நா. பெண்கள் அமைப் போடு நாங்களும் இணைகின் றோம் என இளைஞர்களும், யுவதிகளும் வெள்ளைப்பட்டி அணிந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (எ)

## மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு



திருக்கோவில், டிசெ. 11

அம்பாறை, திருக்கோவில் கல்வி வலய விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் 2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். விவேகானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார் கலந்து கொண்டார்.

திருக்கோவில் வலயத்துக் குட்பட்ட விசேட கல்வி அலகுகள் காணப்படும் பாடசாலைகளான அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம், தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயம், பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலயம் போன்றவற்றில் கல்வி கற்கும் விசேட தேவையுள்ள மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள் இதன்போது மேடையேற்றப்பட்டன.

விருந்தினர்களால் மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. விசேட தேவையுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கையை முன்னெடுத்துவரும்

ஆசிரியர்களும் விசேட பரிசுப்பொதிகள் வழங்கிக் கௌர விக்கப்பட்டனர். (எ)

# வர்த்தக விளம்பரங்களுக்காக கல்முனையில் டிஜிற்றல் திரை



கல்முனை, டிசெ. 11

கல்முனை மாநகர வர்த்தக நிலையங்களின் வர்த்தக விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்காக கல்முனை மாநகர சபையால் அமைக்கப்பட்ட டிஜிற்றல் திரை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பொறியியலாளர் ஏ. ஜே. ஏ. எச். ஜௌஸி, உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம் மற்றும் கல்முனை வர்த்தக சங்கத்தின் தலைவர் கே. எம். சித்தீக் உட்பட ஏனைய வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ)

## வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நஸீர் கடமையேற்பு



கல்முனை, டிசெ. 11

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலாளராக எம். எம். நஸீர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர், பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, மாகாண அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களை நியமித்து அவர்களுக்கான கடிதங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது, இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியான எம். எம். நஸீருக்கு வீதி அபிவிருத்தி அமைச் சின் செயலாளருக்கான கடிதத்தை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றி வரும் ஜே. லியாக்கத் அலி, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

# சாய்ந்தமருதில் கர்ப்பவதிகளுக்கு தேவையான பொதிகள் வழங்கல்

சாய்ந்தமருது, டிசெ. 11

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் ஒன்றான சாய்ந்தமருது வொலிவேரியன் கிராம கர்ப்பவதிகளுக்கு பிரசவத்துக்கு தேவையான பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கண்டி மனிதாபிமான அமைப்பின் அனுசரணையுடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம்.



ஆஷிக், கண்டி மனிதாபிமான அமைப்பின் பிரதிநிதிகளான திருமதி ராஷிதா, எம். என். எம். நௌஷாத், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது,சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 கர்ப்பவதிகளுக்குத் தேவையான பொதிகள் வழங்கப்பட்டன.(எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# பெண்களின் சுதந்திரத்தில் நாம் தலையிட மாட்டோம்!

## சிரியாவில் ஆட்சியை பிடித்த கிளர்ச்சியாளர்கள் உறுதி

டமாஸ்கஸ், டிசெ. 11

**சிரியாவில் பெண்களின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிட மாட்டோம் என்றும் தனிநபர்களின் உரிமைகளுக்கு மரியாதை கொடுப்பதே நாகரீகமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படை என்றும் சிரியாவில் ஆட்சியைக் கைப்பற்றிய கிளர்ச்சிக் குழு தெரிவித்துள்ளது.**



அந்த நாட்டில் பல ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டுப் போரில் முக்கிய திருப்பமாக கிளர்ச்சியாளர்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ளனர். சமீபத்தில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் அரசாங்கத்தை கிளர்ச்சியாளர்கள் கூட்டணி வீழ்த்தி தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றியது. இதனால், அந்த நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிரியாவில் பெண்களின் ஆடை விடயம் உள்ளிட்ட தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிட மாட்டோம் என்று கிளர்ச்சியாளர்கள் கூறினர்.

இது குறித்து கிளர்ச்சிக் குழு சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள செய்தியில், "பெண்களின் ஆடை விடயத்தில் தலையிடுவது அல்லது அவர்களின் ஆடை கட்டுப்பாடு தொடர்பில் நெருக்கடி கொடுப்பது உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கையிலும் நாங்கள் ஈடுபட மாட்டோம்"- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# தென்கொரிய ஜனாதிபதிக்கு வெளிநாடு செல்லத் தடை

சியோல், டிசெ. 11

அவசர நிலை அறிவித்த விவகாரத்தில் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் - இயோல் வெளிநாடுகளுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் ஜனாதிபதி யூன் சுக்-இயோல் தலைமையிலான மக்கள் அதிகார கட்சி ஆட்சி நடைபெறுகிறது. கடந்த வாரம் தென்கொரியாவில் இராணுவ அவசர நிலை பிரகடனத்தை ஜனாதிபதி அறிவித்தார். இவரது இந்த முடிவுக்கு ஆளுங்கட்சியிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதனையடுத்து அவசர நிலை கைவிடப்பட்டது. எனினும், அவசர நிலையை செயல்படுத்தியதற்காக ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.



இதனால், நாட்டு மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்பு கோரினார். எனினும், அவருக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு பக்கம் அவசர நிலையை பரிந்துரை செய்ததற்காக அவர் மீது விசாரணை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால், யூன் சுக் - இயோல் தப்பிச் செல்லாமல் இருக்க அவருக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. (எ)

# உ. வே. சாமிநாத ஐயர் பிறந்தநாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, டிசெ. 11

'தமிழ் தாத்தா' உ. வே. சாமிநாத ஐயர் பிறந்தநாள் இனி தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் முதல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் நேற்று உரையாற்றுகையில்," உ. வே. சாமிநாத ஐயர் பிறந்த



நாளை 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி' நாளாகக் கொண்டாட வேண்டுமென்று இங்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று, நிச்சயமாக வரக்கூடிய கால கட்டங்களில் உ. வே. சாமிநாத ஐயர் பிறந்தநாள், 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி' நாளாகக் கொண்டாடப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்"- என்றார். முதல்வரின் அறிவிப்புக்கு அவையில் வரவேற்பு தெரிவிக்கப்பட்டது. (எ)

# இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

## பங்களாதேஷ் அரசிடம் இந்தியா வலியுறுத்தல்

டாக்கா, டிசெ. 11

பங்களாதேஷில் வாழும் இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அந்த நாட்டு இடைக்கால அரசிடம் இந்திய வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி வலியுறுத்தியுள்ளார்.



பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, அரசு முறை பயணமாக தலைநகர் டாக்காவுக்கு சென்றார். அங்கு பங்களாதேஷ் வெளிவிவகாரச் செயலாளர் முகமது ஜசீம் உதினை சந்தித்துப் பேசினார்.

இதன்பிறகு பங்களாதேஷ் வெளிவிவகார ஆலோசகர் முகமது தவுகித் ஹுசைனுடன் அவர் பேச்சுகள் நடத்தினார். பின்னர் பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸையும் சந்தித்து முக்கிய பேச்சுகள் நடத்தினார்.

இந்த சந்திப்புகள் தொடர்பில் இந்திய வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி, டாக்காவில் செய்தியாளர்களிடம் கூறுகையில், "பங்களாதேஷில் வாழும் சிறுபான்மையினரின் (இந்துக்கள்) பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினேன். இந்துக் கோவில்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து ஆழ்ந்த கவலையை தெரிவித்தேன்.

பங்களாதேஷ், இந்தியா இடையிலான உறவை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். எரிசக்தி, நதிநீர் பகிர்வு, மின்சாரம், வர்த்தகம் தொடர்பில் இரு நாடுகள் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இரு நாடுகளின் மக்கள் பலனடையும் இந்தத் திட்டங்களை தொடர்ந்து அமுல்படுத்துவது குறித்து பேச்சுகள் நடத்தினேன்"- என்றார். (எ)

# நடுவானில் ஹெலிகள் மோதி விபத்து இராணுவ ஜெனரல் உட்பட ஐவர் பலி!

அங்காரா, டிசெ. 11

துருக்கியில் நடுவானில் இராணுவ ஹெலிகொப்டர்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 5 படையினர் உயிரிழந்தனர்.

துருக்கியின் இஸ்பார்டா மாகாணத்திலுள்ள இராணுவ தளத்தில் வழக்கமான பயிற்சிகள் நடைபெற்றன. அப்போது, பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர்கள் ஒன்றுக்கொன்று மோதின. இதில் ஒரு ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் இராணுவ ஜெனரல் உட்பட 5 படையினர் உடல் சிதறிப் பலியாகினர்.

இதே வேளை, மற்றொரு ஹெலி கொப்டர் பத்திரமாக தரையிறங்கியது. இந்த விபத்துச் சம்பவம்



குறித்து விமான போக்கு வரத்துத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# தீவிரவாதிகளுக்கு தகவல் வழங்க பாக். உளவு அமைப்பு புதிய திட்டம்

புதுடில்லி, டிசெ. 11

இந்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தீவிரவாதிகளுக்கு தகவல் தெரிவிப்பதற்காக, போதைக்கு அடிமையான மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் போல சிலரை சிறைக்குள் நுழைக்க பாகிஸ்தானின் உளவு அமைப்பு (ஐ. எஸ். ஐ.) முயற்சி செய்து வருவது தெரியவந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் முதல் இதுபோன்ற 10இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் பாகிஸ்தானைச் சேர்ந்த சிலர் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளனர். அவர்களில் பலர் ஜம்மு, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், இந்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தீவிரவாதிகளுக்கு சாத்தியமான இடங்களில் முக்கியமான தகவலை வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# வெள்ளப்பெருக்கால் 10 பேர் பலி!

ஜகார்த்தா, டிசெ. 11

இந்தோனேசியா நாட்டின் முக்கிய தீவான ஜாவாவில் கடந்த சில நாட்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இதன்காரணமாக அங்கு நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதில் சிக்கி இதுவரை 10 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஜாவா மாகாணத்தின் சுகாபூமி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த தொடர் கனமழையால், மலையோர கிராமங்களில் மண், பாறைகள் மற்றும் மரங்கள் சரிந்து விழுந்ததால், 170இற்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆறுகள் கரைபுரண்டு ஓடுகின்றன.

இந்த நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளத்தால் 172 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, 3,000இற்கும் மேற்பட்ட மக்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் 31 பாலங்கள், 81 வீதிகள் மற்றும் 539 ஹெக்டேயர் நெல் வயல்கள் சேதமடைந்துள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிராஜுக்கு அபராதம்



டுபாய், டிசெ. 11

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சிராஜுக்கு போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலியா 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய அணியின் இந்த வெற்றிக்கு சதமடித்து முக்கிய பங்காற்றிய ட்ராவிஸ் ஹெட் (140 ஓட்டங்கள்) ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

அவுஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸின் போது சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த ட்ராவிஸ் ஹெட்டின் விக்கெட்டை கைப்பற்றிய சிராஜ் அதனை ஆக்ரோஷத்துடன் கொண்டாடினார். மேலும், அவரை நோக்கி "வெளியே செல்லுங்கள்" என்ற வகையில் சைகை செய்தார். இதனால், அவர்களுக்குள் சிறிது மோதல் ஏற்பட்டது.

இதன் பின் 2ஆவது நாள் ஆட்டநேர முடிவில் செய்தியாளர்கள் சந்திப்பில் "நீங்கள் நன்றாக பந்து வீசினீர்கள்" என்றுதான் சிராஜிடம் தாம் சொன்னதாக ட்ராவிஸ் ஹெட் கூறினார். ஆனால், அதை சிராஜ் வேறு விதமாக புரிந்து கொண்டு அப்படி செய்தது ஏமாற்றத்தைக் கொடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், அந்தச் சூழ்நிலையில் விக்கெட் எடுத்த போது வெறித்தனமாக கொண்டாடிய தம்மிடம் ஹெட் சில மோசமான வார்த்தைகளை சொன்னதாக முகமது சிராஜ் தெரிவித்தார். போட்டியின் முடிவிலும் இரு வரும் கை கொடுத்து புன்னகை முகத்துடன் சென்று மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

இருப்பினும் சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) இவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது. விதிமுறைகளை மீறும் வகையில் இருவரும் செயல்பட்டதால் இந்த விவகாரத்தை ஐ. சி. சி. விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில், ஐ. சி. சி. நடத்தை விதியை மீறியதாக சிராஜுக்கு அவரது போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று சர்வதேச போட்டியின் போது ஒரு வீரர், வீரர் ஆதரவு பணியாளர்கள், நடுவர் அல்லது நடுவரை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பான ஐ. சி. சி. நடத்தை விதிகள் மற்றும் வீரர்கள் மற்றும் ஆதரவு பணியாளர்களுக்கான விதி 2.13ஐ மீறியதற்காக ஹெட்டுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

சிராஜ் மற்றும் ஹெட் ஆகியோர் தலா ஒரு டிமெரிட் புள்ளியைப் பெற்றனர். இது கடந்த 24 மாதங்களுக்குள் அவர்கள் செய்த முதல் குற்றமாகும். இரு வீரர்களும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதுடன், போட்டி நடுவர் ரஞ்சன் மதுகலே முன்மொழிந்த தடைகளை ஏற்றுக்கொண்டனர். (எ)

# ரிஷப் அணுகுமுறையை பாராட்டிய ஹாரி புரூக்

வெலிங்டன், டிசெ. 11

இந்திய அணியின் ரிஷப் பண்டின் துடுப்பாட்ட அணுகுமுறையை இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் பாராட்டியுள்ளார்.

"முதல் பந்தை எதிர்கொண்ட போது ரிஷப் பண்ட் அதை அனுபவித்தை நீங்கள் பார்த்தீர்களா என்று எனக்குத் தெரியாது. இறங்கி வந்து பந்தை விளாசினார். அதற்கு அசாத்திய தைரியம் வேண்டும். அதை நாங்கள் கடந்த சில ஆண்டுகளாக களத்தில் செய்து வருகிறோம். நாங்கள் களத்தில் ஓட்டம் குவிக்கவே விரும்புகிறோம். இதை நாங்கள் எப்போதும் சொல்வோம்" என ஹாரி புரூக் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான அடிலெய்ட் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 66 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்களை இழந்து இந்தியா தடுமாறியது. அப்போது களம் கண்ட ரிஷப் பண்ட், தான் எதிர்கொண்ட முதல் பந்தை பௌண்டரிக்கு விரட்டினார். (எ)

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

# நான்கு அணிகளுக்கு மட்டுமே இறுதிக்கு முன்னேற வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 11

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற அணிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது.

3ஆவது உலக டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்ஷிப் இறுதிக்கட்டத்தை நெருங்குகிறது. அடுத்த ஆண்டு ஜூன் மாதம் லண்டன் லோர்ட் மைதானத்தில் நடக்கும் இதன் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும் இரு அணிகள் எவை? என்பதை யூகிக்க முடியாத அளவுக்கு போட்டி நிலவுகிறது. இந்த வாய்ப்பில் தற்போது தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை ஆகிய அணிகள் முன்னணியில் உள்ளன.

இந்தப் புள்ளிப் பட்டியலில் (63. 33 சதவீதம்) முதலிடத்தில் உள்ள தென்னாபிரிக்காவுக்கு இறுதிப்போட்டிக்கு முன்னேற பிரகாசமான வாய்ப்புள்ளது.

எதிர்வரும் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் (2 போட்டிகள்) வெற்றி பெற்றால் எளிதில் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். மாறாக 1 - 1 என்ற கணக்கில் சமனில் முடிந்தால் மற்ற அணிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டிருக்கும்.

இந்தப் புள்ளிப்பட்டியலில் அவுஸ்திரேலியா 60.71 சதவீத புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலுள்ளது. தற்போது நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரை கைப்பற்றினாலே இறுதிப்போட்டிக்கு முன்னேறி விடும். தோல்வியடைந்தாலும் அடுத்து நடைபெறும் இலங்கைக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை கைப்பற்றினாலே போதும், எந்த வித சிக்கலுமின்றி இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

மாறாக 2 தொடர்களிலும் தோல்வியைத் தழுவினால் இறுதிப்போட்டிக்கு முன்னேறுவதில் சிக்கல் உருவாகும்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் 57.29 சதவீத புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ள இந்தியா அவுஸ்திரேலியாவுக்கு எதிரான எஞ்சிய 3 போட்டிகளையும் கட்டாயம் வென்றாக வேண்டும். ஒன்றில் தோல்வியடைந்தாலும் மற்ற அணிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டிய நிலை உருவாகும்.

தற்போது 45. 45 சதவீத புள்ளிகளுடன் 4ஆவது இடத்தில் உள்ள இலங்கை சொந்த மண்ணில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2 ஆட்டங்கள் கொண்ட தொடரை வென்றால் இறுதிப்போட்டி வாய்ப்பில் நீடிக்க முடியும். மேலும், மற்ற அணிகளின் முடிவுகள் சாதகமாக அமைய வேண்டியதும் அவசியமாகும்.

இதேவேளை, 45. 24 சதவீத புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலுள்ள இங்கிலாந்துக்கு இறுதிப்போட்டிக்கு முன்னேற வாய்ப்பு ஏறக்குறைய முடிந்து விட்டது. இருப்பினும் நியூசிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் வெற்றி பெற்று மற்ற அணிகளின் முடிவுகளும் இங்கிலாந்துக்கு ஏற்ப அமைந்தால் இறுதிப்போட்டிக்கு வாய்ப்புள்ளது.

நியூசிலாந்து (44.23 சதவீதம்), பாகிஸ்தான் (33.33 சதவீதம்), பங்களாதேஷ் (31.25 சதவீதம்) மற்றும் மேற்கு இந்திய தீவுகள் (24.24 சதவீதம்) ஆகிய அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பில் இருந்து வெளியேறி விட்டன. (எ)

## "இந்தியாவில் நடைபெறும் போட்டிகளை பாகிஸ்தான் புறக்கணிக்க வேண்டும்"



கராச்சி, டிசெ. 11

இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளை பாகிஸ்தான் புறக்கணிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஷாகித் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஆனால், பாகிஸ்தானுக்கு சென்று விளையாட மாட்டோம் என்றும், இந்தியா பங்கேற்கும் போட்டிகளை டுபாயில் நடத்த வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) வலியுறுத்தி வருகிறது. எனவே, ஹைபிரிட் மொடல் வகையில் போட்டி நடத்தப்பட வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தி வருகிறது. அதாவது இந்தியா பங்கேற்கும் போட்டிகள் நடுவுநிலையான மைதானங்களில் நடத்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, போட்டியின் அட்டவணையை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து கராச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் ஷாகித் அப்ரிடி கூறுகையில், "பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வலுவாகவும், தன்னிறைவாகவும் இருக்க வேண்டும். மேலும், வெளிநாடுகளில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பது குறித்து வலுவான கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் பாகிஸ்தான் அணி பங்கேற்கக் கூடாது. அந்த போட்டிகள் அனைத்தையும் புறக்கணிக்க வேண்டும்"- என்றார். (எ)

## ஆசிய கிண்ண ஹொக்கியில் இந்திய அணி 2ஆவது வெற்றி

மஸ்கட், டிசெ. 11

மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கி போட்டியில் இந்திய அணி 2ஆவது வெற்றியை பெற்றது.

10 அணிகள் மோதும் 9ஆவது மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கி தொடர் (21 வயதுக்குட்பட்டோர்) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடந்து வருகிறது. இதில் நடப்பு சம்பியனான இந்தியா தனது முதலாவது ஆட்டத்தில் 13 - 1 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வீழ்த்தியது.

இதனையடுத்து இந்திய அணி தனது 2ஆவது ஆட்டத்தில் மலேசியாவுடன் மோதியது. இதன்படி நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளாலும் முதல் பாதியில் கோல் அடிக்க முடியவில்லை.

2ஆவது பாதியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்தியா அடுத்தடுத்து கோல்களை போட்டு அசத்தியது. முடிவில் இந்தியா 5 - 0 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி 2ஆவது வெற்றியை பதிவு செய்தது. இந்திய அணியில் தீபிகா 3 கோல்களும், வைஷ்ணவி மற்றும் கனிகா சிவாச் தலா ஒரு கோலும் அடித்தனர். இந்திய அணி அடுத்த ஆட்டத்தில் சீனாவை இன்று எதிர்கொள்கிறது. (எ)

## ஆப்கான் - சிம்பாவே இடையே முதல் ரி - 20 போட்டி இன்று

ஹராரே, டிசெ. 11

ஆப்கானிஸ்தான் - சிம்பாவே இடையே இன்று முதலாவது ரி - 20 போட்டி நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் மற்றும் ரி - 20 தொடருக்கான சிம்பாவே அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் இன்று 11ஆம் திகதி தொடங்குகிறது. முதலில் ரி - 20 போட்டிகளும், அதைத்தொடர்ந்து ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் மற்றும் ரி - 20 தொடர்களுக்கான சிம்பாவே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒருநாள் அணியில் சாம் கர்ரனின் சகோதரரான பென் கர்ரன் இடம் பிடித்துள்ளார். இங்கிலாந்து அணியில் இடம் கிடைக்காததால் சிம்பாவேவுக்கு இடம் பெயர்ந்த அவருக்கு அணியில் வாய்ப்பு கிடைத்துள்ளது. சிம்பாவே ஒருநாள் அணிக்கு கிரேக் எர்வின் தலைவராகவும், ரி - 20 அணிக்கு சிக்கந்தர் ராசா தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு...

நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

டிசெம்பர் 17 ஆம் திகதி வரை இந்தியாவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடனும், மேலும் பல அதிகாரிகளுடனும் சந்திப்புக்களை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## மீனவர்...

நடைபவனி, முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபம் வரை இடம்பெற்றது.

குறித்த நடைபவனியில் ஈடுபட்டிருந்தவர்கள் இந்திய இழுவைமடி ஆக்கிரமிப்பை நிறுத்துதல், மீனவ சட்டத்தை உடன் அமுல்படுத்துதல், சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளை முற்றாக தடை செய்தல், கனியமணல் அகழ்வைக் கட்டுப்படுத்தல், சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பண்ணை வளர்ப்புத் திட்டங்களை நிறுத்துதல், காற்றாலை மின்சாரத் திட்டத்தைத் தடை செய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கோசங்களை எழுப்பியவாறும், பாதாதைகளைத் தாங்கியவாறு நடைபவனியில் ஈடுபட்டனர்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் 16 மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், மீனவர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேசசபை கலாசார மண்டபத்தில் உலக மீனவ தின நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ)

## இந்திய...

கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் கோரிக்கை விடுத்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவுட் சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளினால் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

நாம் பலமுறை இந்தியத் தூதரகம், இலங்கை அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்தும் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி தொடர்ச்சியாக நமது கடற்பரப்புக்குள் நுழைந்து எமது வாழ்வாதாரங்களை அழித்து வருகின்றன.

இந்நிலையில் இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க முதல் பயணமாக எதிர்வரும் வாரம் இந்தியா செல்ல உள்ளதாக அறிகிறோம்.

இந்திய இழுவமடிப் படகுகளினால் எமது மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிப்புக்கு உள்ளாகி வருவதை இலங்கை ஜனாதிபதியும் கடற்தொழில் அமைச்சரும் நன்கு அறிவார்கள்.

மேலும் முன்னாள் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் யாழ்.மாவட்ட மீனவர்களுக்கு வழங்குவதற்காக வலைகள் எடுத்து வரப்பட்ட நிலையில் மீனவர்களுக்கு அவற்றை வழங்கவில்லை.

குறித்த விடயம் தொடர்பில் புதிய கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரனுக்கு தெரிவித்த நிலையிலும் இதுவரை மீனவர்களுக்கு அவை வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் கடற்தொழில் அமைச்சர் உரிய கவனம் எடுத்து தேங்கிக் கிடக்கும் வலைகளை மீனவர்களுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ)

## வவுனியாவில்...

தேர்தல் திணைக்களப் பிரிவில் கடமையாற்றும் அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

## படுகொலை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடகத்துறையும் ஊடகவியலாளர்களும் பாதுகாக்க வேண்டும் என்பதில் நிபந்தனைகள் எதுவுமின்றி அரசாங்கம் என்ற வகையில் நாம் முன்நிற்கிறோம். நாட்டில் கடந்த காலங்களில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பிலான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை முதல் ஏனைய ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பிலான விசாரணைகள் கடந்த அரசாங்கங்களினால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. விசாரணைகளை நடத்திய அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டன. மேலும் சிலருக்கு வெளிநாடுகளுக்குச் செல்ல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சில கொலைகள் தொடர்பிலான ஆவணங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன. ஆனால் எம்முடைய அரசாங்கத்தின் ஆட்சியில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்-என்றார். (அ)

## மீண்டும்...

ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் தெரிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

இதில் கலந்துகொண்ட பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருடன் கலந்துரையாடல் ஒன்றை இன்று (நேற்று) நடத்துவதற்கு தீர்மானித்திருக்கிறோம். எமது பாராளுமன்றக் குழுவில் ஒரு ஒற்றுமைவேண்டும் என்று நினைக்கிறேன். அந்த ஒற்றுமை இல்லாமையினால் எமது தேசத்தில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன. அது தொடர்ந்தால் இங்கு இனப்பிரச்னை என்ற ஒன்று இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடும்.

எனவே இனம் சார்ந்த விடுதலையினை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற வகையில் நாம் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்தால் மக்கள் எங்களுடன் நிற்பார்கள்.

எனவே பாராளுமன்றுக்குள்ளும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு அணியாக சேர்ந்தும் பொது விடயங்களில் ஒன்றாக குரல் கொடுக்கும் நிலையை ஏற்படுத்தவேண்டும். அத்துடன் வடக்கு-கிழக்கில் முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படலாமா என்பது தொடர்பிலும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

அத்துடன் பெருவாரியான வாக்குகளை பெற்ற இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதி பேசியபோது ஒரு மணிகூட வெளியில் இருந்து இறக்கமாட்டோம் என்று சொல்லியிருந்தார். ஆனால் இன்று நிலைமை மாறி இறக்குமதி செய்யும் சூழல் வந்துள்ளது. சர்வதேச நாணய நிதிய விடயத்தில் எந்தவொரு மறுப்பும் தெரிவிக்காமல் இவர்கள் கையொயப்பம் இட்டுள்ளனர்.

எனவே இந்த நிலைமையில் அர சாங்கம் சென்றால் மீண்டும் வரிசையுகம் வரும் சந்தர்ப்பம் ஏற்ப்படும். எனவே அரசாங்கம் நிதானமாக செயற்பட வேண்டும்.

இன்று சாதாரணமக்கள் கூட தேங்காய் வாங்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே ஏழைமக்களின் வயிற்றில் அடிக்கும் சூழலை மாற்ற வேண்டும் - என்றார். (அ)

# தீயில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 11

பெண் ஒருவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சங்கரன் தோட்டம், கரணவாய் தெற்கைச் சேர்ந்த சிவகுரு சிவபூங்கா (வயது 48) என்ற திருமணமாகாத பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இவர் இரண்டு சகோதரிகளுடன் வீட்டில் வசித்து வந்துள்ள நிலையில், வீட்டுக்கு அருகாமையில் உள்ள பனங்காணி ஒன்றில் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

(அ)

## சபாநாயகர்...

பேச்சாளர் குறித்த தகவல் பொய்யானது என்றும், கலாநிதி அசோக ரன்வல கலாநிதி இல்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை,

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வெல ஜப்பானில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி கற்வில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அசோக ரன்வெல, ஜப்பானில் உள்ள பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் படித்தவரா என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு அந்தப் பல்கலைக்கழகத்திடம் தகவல்களைக் கோரியுள்ளது.

இந்நிலையில், அசோக சபுமல் ரன்வால என்னும் நபர் தமது பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கவில்லை என அப்பல்கலைக்கழகம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரால் வெவ்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சபாநாயகர் அசோக ரன்வல்ல தனது கலாநிதி பட்டம் குறித்து வெளிவரும் தகவல்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் அறிக்கை ஒன்றினை வெளியிடுவார் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

இவற்றிற்கு மத்தியில் ஜப்பானிய பல்கலைக்கழகம் வழங்கிய இந்த தகவல் புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வலிந்து...

முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடியும் அவர்களுக்கு நீதி கோரியும் கடந்த பல வருடங்களாக அவர்களின் உறவுகள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை அரசிடம் நீதி கோரியும் கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதுவரை தீர்வு கிடைக்காத நிலையில், சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் வடக்கு கிழக்கில் இன்று, பேரணி மற்றும் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

அந்தவகையில் கிளிநொச்சியில் கந்தசுவாமி கோவில் முன்றலில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரிலும் போராட்டம் இடம்பெற்றது. மன்னார் பஸ் நிலைத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியாவிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தில் ஈடுபட்டனர். கந்தசுவாமி கோவில் முன்பாக தீச்சட்டியை ஏந்தி ஆரம்பமான போராட்ட பேரணி, மணிக்கூட்டு கோபுரம் ஊடாக பழைய பஸ் நிலையத்தை அடைந்து, அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் பொதுநூலக முன்றலிலும் போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (அ)

(படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## வைத்தியசாலை...

உறுப்பினர் அர்ச்சுனா, தான் தற்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்றும், தன்னை சேர் என்று அழைக்குமாறும் கூறி எம்மோடு முரண்பட்டார்.

அவரை சேர் என்று அழைக்க முடியாது என்று பதிலளித்ததற்கு, என்னை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து அகற்றுவேன் எனவும், பாராளுமன்றத்துக்கு அழைத்து கேள்வி கேட்பேன் என்றும் கூறினார். அத்துடன் என்னை வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லுமாறும் கூறினார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குள் உள்நுழைந்து பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பம் விளைவிப்பதற்கு இடமளிக்க முடியாது.

மீண்டும் ஒருமுறை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழப்பம் விளைவிக்க முற்படுவராயின் வாசலிலேயே வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்-என்றார். (அ-05)

## உதயங்க...

மற்றும் சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு உலகில் ஊழல் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்துள்ளது

சிறிலங்கன் எயார்லைன்ஸின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபிலசந்திரசேன பிரதம நிறைவேற்றதிகாரியாக பணியாற்றியவேளை இலங்கை, எயார்பஸ்ஸினை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதை உறுதி செய்வ தற்காக இவர் இலஞ்சம் பெற்றார் என அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்து அவரை குறிப்பிட்ட பட்டியலில் இணைத்துள்ளதுடன் இவரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களும் இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராகவும் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க இலங்கைக்கு மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டபோது ஊழல் நடவடிக்கையை திட்டமிட்டு முன்னெடுத்து அதனால் நன்மையடைந்தார் என்றும் அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும் பயணத்தடை விதித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு முன்னாள் பணிப்பாளர் கைது!

கொழும்பு, டிசெ. 11

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடத்தல் மற்றும் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்க உதவிய குற்றச்சாட்டின் பேரில், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நேற்று முன் தினம் மாலை பொலிஸ்களப் படைத் தலைமையகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் 2023 ஒகஸ்ட் மாதம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். நெவில் டி சில்வா கொழும்பு குற்றப்பிரிவின் இயக்குநராக இருந்தபோது, விசாரணையின் போது முறைப்பாட்டாளர் ஒருவருக்கு சாதகமாக செயல்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ள நெவில் டி சில்வா இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# வீட்டில் சளிக்கு சிகிச்சை பெற்ற மூன்று மாத குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 11

சளித் தொல்லையால் வீட்டில் சிகிச்சை பெற்று வந்த 3 மாத குழந்தை உயிரிழந்துள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், தெமட்டபிட்டிய, தம்மிக்ககம பகுதியைச் சேர்ந்த 3 மாத பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் பெற்றோர் தென்னந்தும்புத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், குழந்தை சளித் தொல்லை காரணமாக நீண்ட நாட்களாக வீட்டில் சிகிச்சை பெற்று வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ தினத்தன்று, குழந்தை பெற்றோருடன் வீட்டின் மாடியில் உறங்கிக் கொண்டிருந்துள்ள நிலையில் குழந்தையின் மூக்கில் இருந்து இரத்தம் மற்றும் பால் என்பன கசிந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது. (அ)

# எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கேக் விலையை குறைக்கமுடியாது!

## பேக்கரி உரிமையாளர்கள் சங்க தலைவர்

கொழும்பு, டிசெ. 11

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலத்துக்கான கேக் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கேக் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களின் விலை மற்றும் வரி அதிகமாக இருப்பதால் கேக் தயாரிப்பில் அதிக செலவு செய்யவேண்டியுள்ளது.

நல்லெண்ணெய், கோதுமை மா, முட்டை உள்ளிட்ட கேக் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டால், கேக் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியும்.

இந்த நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு புதிய அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சரிடம் எமது சங்கம் சந்தர்ப்பம் கோரியது. ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இதன்படி, தற்போது கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்கான கேக்குகளின் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

தற்போது சந்தையில் ஒரு கிலோ தரமான கேக்குகள் 1000 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றன - என்றார். (அ)

# உணவு பாதுகாப்புக் குழுவை நிறுவ அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 11

**உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக் ணகளத்தில் நேற்று இடம்பெற்ற போதே, அவர் இதனை கூறினார்.

ஒவ்வொரு பிரஜையின் குறைந்தபட்ச உணவுத் தேவை போதியளவிலும் தரப்பண்புடன் கூடியதுமான மலிவாகப் பெற்றுக் கொடுப்பதே அரசின் பிரதான நோக்கம் என்பதுடன், புதிய அரசின் தேர்தல் விஞ்ஞா பனத்தின் மூலம் அதற்கான பல நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளது. நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உணவுகளும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல், குறைந்தபட்சம் 03 மாதங்களுக்கு போதியளவு அத்தியாவசிய உணவு சுயபாதுகாப்புத் தொகையைப் பேணுதல், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் போன்ற செயன்முறைகளுக்குத் தனியார் துறையையும் பங்கெடுக்கச் செய்யும் வேலைத்திட்டம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த பணிகளுக்கு அதிக கவனத்தைச் செலுத்துதல் உள்ளிட்ட நிறுவன ஒருங்கிணைப்பை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்குக் காப்பு வேலைத்திட்டத்தை ஜனாதிபதி செயலகத்தின் மூலம் ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க "உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு" ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு ஹெக்ரேயருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு!

கொழும்பு, டிசெ. 11

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக, விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் விவசாயச் செய்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்த நட்டத்திலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில், இந்த நட்டஈடு வழங்கப்பட உள்ளது. ஹெக்ரேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க முடியும் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான சுற்றறிக்கை நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் விவசாயிகள் இதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் பிரதியமைச்சர் வலியுறுத்தினார். இதற்கமைய, விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு உரிய மதிப்பீட்டுத் தொகையையும், பகுதியளவான சேதத்திற்கு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 60 வீத இழப்பீட்டுத் தொகையையும், அடிப்படைச் சேதத்திற்கு 40 வீத இழப்பீட்டுத் தொகையையும் பெறுவார்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீனவர்களின் மண்ணெண்ணெய் மானியமாக மாதாந்தம் 9,375 ரூபா!

கொழும்பு, டிசெ. 11

அடுத்த 5 மாதங்களுக்கு மீனவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் மானியமாக மாதாந்தம் 9,375 ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட விரைவு சிறிய மீன்பிடிப் படகுகளுக்கு இந்த மானியம் வழங்கப்பட உள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இந்த தகவலை தெரிவித்தார்.

முன்னர் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மானியத்தை இலகுபடுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் இதன்போது கூறினார். (அ)

# கலாநிதி பட்ட சர்ச்சை குறித்து தெளிவுபடுத்துவார் சபாநாயகர்

கொழும்பு, டிசெ. 11

சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தனது கலாநிதி பட்டம் தொடர்பாக வெளிவரும் பல்வேறு கருத்துகள் தொடர்பில் இன்னும் சில நாட்களில் அறிக்கை வெளியிடுவார் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்தார்.

சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பான செய்திகள் உண்மையாக இருந்தால் அவருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், சபாநாயகரின் அறிக்கைக்குப் பின்னர் அது குறித்து அறிவிக்கப்படும் - என்றார்.

"சபாநாயகர் தகுதிகள் குறித்து அறிக்கை வெளியிட்ட பிறகு பரிசீலிப்போம். அறிக்கைகள் உண்மையாக இருந்தால் எடுக்க வேண்டிய முடிவையும், பொய்யாக இருந்தால் எடுக்கவேண்டிய முடிவையும் சொல்கிறேன்-" என்றார்.

சபாநாயகர் அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் தொடர்பாக சமூக ஊடகங்களில் பல்வேறு தகவல்கள் பரவி வருவதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரியவும் தற்போதைய சபாநாயகரிடம் கலாநிதிப் பட்டம் இருப்பது உண்மையென்றால் அதனை நிரூபித்துக் காட்டுமாறு அண்மையில் சபாநாயகருக்கு சவால் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இரவு 10 மணிவரை கடவுச்சீட்டு சேவை!

கொழும்பு, டிசெ. 11

கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அவற்றை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டை விநியோகிக்கும் நேரத்தை அதிகரித்துள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிய நடைமுறையின் கீழ், வார நாட்களில் இரவு 10 மணி வரை ஒரு நாள் சேவையில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். கடவுச்சீட்டுப் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவசர தேவைப்பாடுகளுக்காக கடவுச்சீட்டைப் பெறவுள்ளவர்கள் நன்மையடைவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சம்பந்தனுக்கு தமிழ்நாடு சட்ட சபையில் அஞ்சலி

சென்னை, டிசெ. 11

கடந்த ஜூன் மாதம் காலமான இலங்கையின் முதுபெரும் தமிழ்த் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனுக்கு திங்கட்கிழமை தமிழ்நாடு சட்டசபை அஞ்சலி செலுத்தியது.

அண்மைய மாதங்களில் காலமான இந்திய அரசியல் தலைவர்களான மேற்கு வங்க மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் புத்தாதெப் பட்டாச்சார்யா, புகழ்பெற்ற கம்யூனிஸ்ட் தலைவர் சீத்தாராம் யெச்சூரி, முனாநாள் இராணுவத் தளபதி ஜெனரல் எஸ். பதமநாபன் ஆகியோருக்கும் சட்டசபை அஞ்சலி செலுத்தியது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org